**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 61-2025**

**Prosecution witness : எ.சா.1** **Date : 10.11.2025.**

| | |
|---|---|
| **Name : சங்கீதா** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குவிமுச 353 ன் கீழ் மனு அனுமதிக்கபட்டபேரில் முதல் விசாரணை**

1) நான் குஞ்சாண்டியூரில் குடியிருந்து ஆசிரியராக பணியாற்றி வருகிறேன். எனக்கு திருமணம் ஆகி தற்போது கணவர் இறந்து விட்டார். எனது கணவர் பெயர் ரமேஸ் ஆகும். எனது குழந்தை தற்போது 9 ம் வகுப்பு படித்து வருகிறார். எனது கணவர் 19.09.2021ம் தேதியன்று இறந்து போய்விட்டார். எனது கணவர் இறந்தபின்னிட்டு கணவரின் தம்பி மகன் பிரபு என்னிடம் பாலியல் தொல்லை கொடுத்து கொண்டே இருக்கிறார். எனது கணவர் இறந்த பின்னிட்டு 2 வாரத்தில் எனது கன்னத்தை பிடித்து இழுத்தும், கட்டி பிடிக்க முயற்சி செய்தும், முடியை பிடித்து இழுக்க முயற்சி செய்கிறார். அவர் என்னுடன் படுக்க நினைக்கிறார். என்னுடன் படுக்க முடியாத என்று சொல்லி கேவலமாக திட்டுகிறார்.

2). எனது கணவர் இறந்து இரண்டு வாரத்திற்கு பின்னிட்டு மின்சாரம் துண்டித்த போது என்னுடைய பெட்ருமிற்கு வந்து அவருடன் படுத்துஆக வேண்டுமென்று கட்டாயபடுத்தினார். இரவு நேரத்தில் போன் செய்து தொந்திரவு கொடுத்தும், ஆபாசமான வார்த்தை பயன்படுத்துகிறார். என்னை அடித்ததால் நான் சத்தம் போட்டதால் என்னுடைய அப்பா அம்மா அவரை வெளியே இழுத்து வந்து திட்டினார்கள். இதனால் சண்டை போட்டார்கள். என்னை அடித்தால், கட்டாயத்திற்கு இணங்கதால் கருமலைகூடல் காவல் நிலையத்தில் புகார் செய்ய

சென்ற போது கணவருடைய மாமா ராஜேந்திரன் பள்ளபட்டி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளர் போன் செய்து எந்த கேஸ் போட வேண்டாம் என சொன்னார்கள். இது குடும்ப பிரச்சனை என்று சொல்லி நாங்கள் சரிசெய்கிறோம் என்று கேஸ் எடுக்க சொன்னார்கள். ஊர் பெரியவர்கள் முன்னிலையில் சமாதானம் பேசி இதற்கு மேல் ராஜேந்திரன் பிரபு தொந்திரவு செய்யமாட்டார்கள் என்றும் ஒரு முறை எங்களது பேச்சை கேட்க சொன்னார்கள்.

3) என்னிடம் இருந்த ஆதாரத்தை என்னுடைய கணவருடைய மாமா ராஜேந்திரன் என்னிடம் இருந்த போனில் இருந்த பிரபு அனுப்பிய மெஜேயை Delete செய்து call –யையும் Delete செய்துவிட்டு போனையும் உடைத்துவிட்டார். இதற்கு மேல நீயும் இதபத்தி நினைக்காத, அவர்களும் என்னை எந்த தொந்தரவும் செய்யமாட்டார்கள் என சமதானம் பேசி முடித்தார்கள். அதையே மனதில் வைத்துக்கொண்டு அதன்பிறகு என்னுடைய கொழுந்தனார் மனைவி சுமதி, நாத்தனார் சசிகலா, நாத்தனார் கணவர் ராஜேந்திரன், என்னுடைய மாமியார் சம்புவள்ளி என்னை தொந்தரவு செய்ததற்காக வீட்டை விட்டு அனுப்பியே ஆகனும், என்னுடைய கொழுந்தனார் பிரபுவின் ஆசைக்கு அடிபனிந்து போகததாலும், என்னை பழி வாங்கவேண்டும் என்பதற்காக என்னுடைய மாமியார் சம்புவள்ளியை தூண்டிவிட்டு இப்பவரைக்கும் என்னை தொந்தரவு செய்துகொண்டு உள்ளனர்.

4) என்னுடைய மாமியார் மேலேயிருந்து குப்பையை அள்ளி கீழே கொட்டறது, முகத்தில் வீசுறது, பாத்ரூம் பைப் அவங்களே ஓபன் பன்னி யூரின் , டாய்லட் கழிவு எல்லாம் படியிலிருந்து நாங்கள் குடியிருக்கற கீழ் தளம் வரைக்கும் வழிந்து வருமாறு செய்தார்கள். இதை எல்லாம் செய்தார்கள் என்பதால் கருமலைக்கூடல் காவல்நிலையத்தில் புகார் அளிக்க சென்றேன். என் கணவரின் மாமா ராஜேந்திரன் SI ஆக உள்ளார். அவருடைய பதவியை பயன்படுத்தி நேரில் வந்து அவர்களை திட்டிவிடுங்கள், அவர்கள் இனிமே காவல் நிலையத்திற்கே வராத மாதிரி திட்டிவிடுங்கள் என்று கூறியதால் கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் என்னிடம் ஆதாரம் எதாவது இருந்தால்

கொண்டுவந்தால் நடவடிக்கை எடுப்பதாக கூறி எனது புகாரை எடுக்க மறுத்துவிட்டார்கள்.

5) அதனை தொடர்ந்து நான் இது சம்பந்தமாக முதல்வரின் தனிப்பிரிவு மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் அளித்தோம். புகார் கொடுத்தற்காக கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் அழைத்து விசாரித்தார்கள். இதனால் என்மீது கணவரின் தம்பி பிரபு சுமதி, என்னுடைய நாத்தனார், என்னுடைய நாத்தனார் கணவர் ராஜேந்திரன், மாமியாரை தூண்டிவிட்டு என்னை வீட்டை விட்டு துரத்தவேண்டும் என தினம்தினம் எட்னனுடைய மாமியார் என்னை கெட்ட வ ா ர்த்தையால் திட்டுவது, உன் வீடு இல்லடி தேவிடியா, உன் மாப்பிளையா கட்டி வைத்தான் இந்த வீட்டை வீட்டில் இருக்ககூடாது என தொந்தரவு செய்து வந்தார். கடந்த 30.09.2024 ம் தேதியன்று என்னுடைய மகள் மாடிக்கு விளையாட சென்றார். அப்போது என்னுடைய மாமியார் ச ம்புவள்ளி என்னுடைய மகளை பார்த்து இங்க எதுக்கு விளையாட வந்த உங்க அம்மா கட்டி வைத்தா வீடா என்று கெட்ட வார்த்தையால் திட்டி அடித்து துரத்திவிட்டார்கள். பின்பு என் மகள் கீழே வந்து விட்டார். அதற்கு பின்னரும் தொடர்ந்து கெட்ட வார்த்தையால் திட்டினார்கள்.

6) மேலே இருந்து குப்பையை அள்ளி என் மகள் மீதும், கீழே வாசலிலும் கொட்டினார். நான் உடல்நலம் பாதிக்கப்பட்டு அறுவைசிகிச்சை செய்து வீட்டில் இருந்தேன். எனது மகளை எதற்காக திட்டினீர்கள் என நான் கேட்டேன். என்னுடைய மகளும் ஏன் இப்படி என்மீது குப்பையை கொட்டினீர்கள் என கேட்டாள். என்னுடைய மாமியார் ச ம்புவள்ளி தேவிடியாலுக்கு இதே பொழப்பா போயிச்சு இதே என்ன வாழ வழியில்லாம இருக்கிங்களா ஏதாவது மருந்து வாங்கி சாப்பிட்டு சாகவேண்டியதுதான என்று திட்டினார்கள். குப்பையையும் அள்ளி என்மீது வீசினார்கள். பிறகு என்னுடைய முடியை பிடித்து இழுத்து அடித்தார்கள். என்னுடைய கொழுந்தனார் பிரபுவும், அவருடைய மனைவி சுமதியையும் நல்லா அடித்து கொல்லு என மாமியாரை தூண்டிவிட்டு என்னை கீழே தள்ளி வயிற்றில் உதைத்தார்கள். அறுவைசிகிச்சை செய்த இடத்தில்

கையால் அடித்தார்கள். குரல்வளையை பிடித்து நசுக்கினார்கள். என்னால் வலி பொறுக்க முடியாமல் கத்தினேன். என்னுடைய மகளும் கத்தினார். என்னுடைய அம்மா சின்னதங்கம் காய் வியாபாரம் செய்துவிட்டு வந்தபோது வழியில் வருபவர்கள் உன் மகளை அடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை சொல்வதை கேட்டு ஓடிவந்து என்னை காப்பாற்றினார்கள். மயக்கமான நிலையில் இருந்த என்னை தண்ணீர் தெளித்து உட்காரவைத்து என்னுடைய அப்பாவிற்கு போன் செய்து ஆம்புலன்ஸ் வரசொல்லி மேட்டுர் அரசு மருத்துமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் முன்னாடி புகார் கொடுத்துவிடுவேன் என்று வக்கீல் சுமதியும், நாத்தனாரின் கணவர் ராஜேந்திரன், பிரபுவும் வேண்டுமென்றே மாமியாரை நானும், என்னுடைய அம்மாவும் அடித்து காயப்படுத்தியதாக பொய்யாக புகார் கொடுத்துவிட்டார்கள்.

7) எங்கள் மீது போடப்பட்ட வழக்கு பொய்யான வழக்காவும், என்னை அடித்தது, எனக்கு பாலியல் தொந்தரவு செய்தது சம்பந்தமாக கருமலைக்கூடல் காவல் நிலைய காவல் ஆ ய்வாளர் மற்றும் காவல் துறை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிய புகார் மனுக்கள் மற்றும் அதற்கான ஒப்புதல் அட்டைகள், தபால் ரசீதுகள் ஆகியவை தாக்கல் செய்கிறேன். கடந்த 30.09.2024 ம் தேதியன்று என்னுடைய மாமியார் என் மீது மண்ணை கொட்டிய போது எடுக்கப்பட்ட புகைப்படம் மற்றும் கழிவு நீர் பைப் உடைத்தற்கான ஆதாரமும் என்னிடம் உள்ளது. அவற்றை தாக்கல் செய்கிறேன். கெட்ட வார்த்தையால் பேசிய வீடியோ ஆதாரத்தையும் தாக்கல் செய்கிறேன். பிரபு எனக்கு அனுப்பிய ஆபாச குறுஞ்செய்திகள், என் தொலைபேசிக்கு அழைத்தது தொடர்பான ஆதாரங்களை எனது கணவரின் மாமா ராஜேந்திரன் அழித்துவிட்டதால் அதை என்னால் தாக்கல் செய்யமுடியவில்லை. நான் கொடுத்த புகாரின் பேரில் 30.09.2024 தேதியன்று கருமலைக்கூடல் காவல்நிலையத்தில் புகார் ஏற்பு மனு 261/2024 வழங்கப்பட்டது. ஆனால் நாளது வரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆவணங்கள் குறியீடு செய்ய முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

D.Myilswamy

Digitally signed by D.Myilswamy
Date: 2025.11.14 11:42:13 +0530

Judicial Magistrate No.II,
Mettur.